3rd **July 1962**]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இன்னும் இந்தப் பயிற்சி முடிவு பெறவில்லை. 12,500 பஞ்சாயத்துத் தலைவர்களும், 12,500 பஞ்சாயதது உப-தலைவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் இந்தப் பயிற்சியைப் பெறவேண்டும். ஒவ்வொரு வட்டாரத் தலைமை ஸ்தானத்திலும் இந்தப் பயிற்சி வாரததில் மூன்று நாட்கள் நடைபெறும். இவர்கள் முதலில் பயிற்சி பெற்றால் இவர்கள் மூலம் கிராமத்திலுள்ளவர்கள் பயிற்சி பெறலாம.

திரு. மீ. கலியாணசுந்தரம் : பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும் உப-தலைவர்களுக்கும் பயிறசி கொடுபபவர்கள் யார்? அவர்களுககு என்ன பயிற்சி கொடுக்கப்பட்டது?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இவர்களுக்குப் பயிற்சி கொடுப்பவர்கள் பஞ்சாயத்து ஆபீசர்கள். பஞ்சாயதது ஆபீசர்களில் முக்கியமாக 11 பேரை பொறுக்கி எடுத்து அவர்கள்மூலம் பயிற்சி கொடுக்கப்படுகிறது. அவர்களுக்கு, பயிறசி அளிக்கக் கூடிய தகுதி இருக்கிறது.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : சார், இவ்வளவு பணம் செல வழித்துப் பயிறசி கொடுக்கிறோமே, பஞ்சாயத்துத் தலைவர்களுடைய 'டர்ம்ஸ் ஆப் ஆபிசை' ஒத்தி வைக்கும் எண்ணம் உண்டா என்றுதான் வினவினேன். அது பற்றி அமைச்சர் அவர்கள் கருத்து என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பஞ்சாயத்துத் தலைவருடைய 'டர்ம்சை'யோ பஞ்சாயத்து உறுப்பினர் 'டர்ம்சை'யோ அதிகப்படுத்த உத்தேசம் இல்லை.

Panchayats and Panchayat Union Councils

* 94 Q.—SRI S. MAHADEVAN : Will the Hon. the Chief Minister be pleased to state the number of (i) panchayats; and (ii) panchayat union councils functioning as on 31st December 1961?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There were 12,535 panchayats and 363 panchayat union councils functioning as on 31st December 1961.

திரு. எஸ். மாதவன் : இந்தப் பஞ்சாயத்து யூனியன்கள் பல கால கட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் ஒரே காலத்தில் எல்லா யூனியன்களுக்கும் தேர்தல் வரவேண்டுமென்ற ஒரு கருத்து அரசாங்கத்திற்கு இருந்து அதற்காகத் தேர்தல்களை ஒத்திப்போடும் உத்தேசம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எந்தத் தேர்தலையும் ஒத்திப் போடுவதாக உத்தேசம் இல்லை.

திரு. ம. கமலநாதன் : இப்போது இருக்கும் பஞ்சாயத்துகளும் முன்பு அமைக்கப்பட்ட பஞ்சாயத்துக்களும் அமைப்பில் பெரியனவாகவும் சிறியனவாகவும் இருக்கின்றன. நிதி நிலைமையைப்

பொறுத்தும், பஞ்சாயத்து எல்லைக்குள் வாழும் மக்கள் நிலையைப் பொறுத்தும் இந்த எல்லைகளை மாற்றவோ பரப்பளவைக் குறைக்கவோ உத்தேசம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பஞ்சாயத்துக்களின் எல்லையை சட்டத்தின்படி பிரிப்பது அப்போதைக்கப்போது பரிசீலனை செய்யப்பட்டு முடிவு செய்யப்பட்டுவருகிறது.

Medical allowance for N.G.Os.

*95 Q.—Sri T. K. MOOKIAH THEVAR: Will the Hon. the Minister for Health be pleased to state whether there is any proposal to grant medical allowance to N.G.Os. in lieu of the free treatment in Government hospitals?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM: No, Sir.

திரு. கே. மூக்கையா தேவர்: சார், இலவசமாக வைத்தியம் செய்கிற காரணத்தால் சரியான மருந்துகள் கொடுப்பதில்லை. கிடைத்தாலும் அந்த வியாதி போகும் அளவுக்கு விலை உயர்ந்த மருந்துகள் கொடுப்பதில்லை. ஆகவே, இந்த இலவச வைத்தியத்திற்குப் பதிலாக அவர்களுக்கு மருத்துவ அலவன்ஸ் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: ஏற்கனவே, இலவச மருத்துவ வசதி கொடுக்கும் காரணத்தால் அலவன்ஸ் கொடுப்பது இயலாது.

திரு. மீ. கலியாணசுந்தரம்: சார், சிகிச்சைக்குப் பதிலாகப் பணம் கொடுப்பது ஒருபுறம் இருக்கட்டும். சிகிச்சை ஒழுங்காக நடக்க உத்தரவிடவேண்டும். விலை உயர்ந்த மருந்துகளை அனுமதிக்கக்கூடாது என்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள் என்பது உண்மையா? அப்படி உத்தரவு இருக்கிறது என்று நான் கூறுகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: அரசாங்கத்திடம் அந்த மாதிரி தகவல் ஒன்றும் கிடையாது.

திரு. வை. சங்கரன்: ஒரு சில மருத்துவ மனைகளில் இலவசம் என்பதால் சரியான மருந்துகள் சிகிச்சைக்கு கிடைப்பதில்லை. ஆகவே, மத்திய சர்க்கார் போல், நம்முடைய அரசாங்கமும் ஏன் படி கொடுக்கக்கூடாது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: என்.ஜி.ஓ.க்களைத் தனியாகக் கவனிப்பதற்காக தக்க நடவடிக்கைகள் எல்லாம் எடுத்து ஆஸ்பத்திரிகளுக்கு உத்தரவு அனுப்பப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வது அவ்வளவு பொருத்தமல்ல என்று நினைக்கிறேன்.